1978 மார்ச் 16]

அன்னவாசலில் பேருந்து நிலையம்.

*598 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி மன்றத்திடமிருந்து, பேருந்து நிலையம் கட்ட கடன் கோரி அரசுக்கு. விண்ணப்பம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஆம்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான்: தலைவர் அவர்களே, அன்னவாசலிலே பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டும் என்று பல நாட்களாக கோரிக்கை கொடுத்து மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அது மறுபடியும் ஒரு அத்தியாவசியமான காரியமாக இருக்கக்கூடியதால் அதை மறுபடியும் அரசாங்கம் பரிசீலனை செய்து, அதை அங்கு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு புதுக்கோட்டை டவுனிலே பஸ் ஸ்டாண்டை மாற்றி மற்றொரு இடத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள், பாதி கட்டி அது அப்படியே நிற்கிறது. அதை எப்போது கட்டி முடிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அன்னவாசல் பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் அங்கு ஒரு ஊரணி இருக்கிறது. அந்த ஊரணியில் பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு செயற்குறிப்பு இருக்கிறது. அந்த ஊரணி இப்போது புழக்கத்தில் இருந்து வருகிறதா, அதை அங்கு கட்டுவதால் பொது மக்களுக்கு ஏதேனும் வசதிக்குறைவு ஏற்படுமா என்ற விவரத்தை அரசு கேட்டிருக்கிறது. அந்த விவரங்கள் கிடைத்தவுடன் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

புதுக்கோட்டை பற்றித் தனியாகக் கேள்வி போட்டு, திரு தொண்டமான் அவர்கள் விவரம் அறிந்து கொள்ளலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அன்னவாசல் பேரூராட்சி மன்றம் எவ்வளவு தொகை கடனாக கேட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 30,000 ரூபாய்.